**செய்தி வெளியீடு எண்: 504** **நாள்: 27.07.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (27.07.2018), சேலம், கொங்கணாபுரத்தில் புதிய காவல் நிலையத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை**

இங்கே ஒரு புதிய காவல் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கையின் அடிப்படையில், இன்றையதினம் அம்மாவினுடைய அரசு புதிய காவல் நிலையம் துவக்கி, உங்கள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் மற்றும் பொதுமக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, இன்றையதினம், வாழப்பாடியில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, வில்லாலபுரம் அம்மா பூங்கா மற்றும் அம்மா உடற்பயிற்சிக் கூடமும் இன்றையதினம் திறக்கப்பட்டுள்ளது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற

காவல் துறை இயக்குநர் அவர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே!

மேற்கு மண்டல காவல் துறை தலைவர் அவர்களே!

சேலம் சரக காவல் துறை துணைத் தலைவர் அவர்களே!

சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம் அவர்களே!

மேட்டூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு.செம்மலை அவர்களே!

சட்டப்பேரவை உறுப்பினர்கள்

திரு.வெங்கடாசலம் அவர்களே!

சகோதரி மனோன்மணி அவர்களே அவர்களே!

திரு.வெற்றிவேல் அவர்களே,

திரு.ராஜா அவர்களே!

சகோதரி கு.சித்ரா அவர்களே!

திரு.மருதமுத்து அவர்களே!

திரு.சின்னத்தம்பி அவர்களே!

மாநில கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களே!

சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களே!

முன்னாள் ஒன்றிய துணைத் தலைவர் திரு.கே.கே.மணி அவர்களே!

முன்னாள் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சகோதரர் திரு.ராஜேந்திரன் அவர்களே!

பெரியோர்களே, தாய்மார்களே, நிர்வாகிகளே, காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களே,

பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே,

அத்தனைபேருக்கும் பணிவான வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் காலையில் துவங்கி மாலை வரை எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ஏற்கனவே துவங்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்று திறப்பு விழா செய்தும், இப்பொழுது புதிய காவல் நிலையத்தை துவக்கி நிறைவு செய்கின்ற வேளை, காலையிலே நங்கவள்ளியிலே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் புதிதாகத் துவங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வனவாசியில் புதிதாக பாலிடெக்னிக் கல்லூரி ஒன்றும் இன்றையதினம் துவங்கப்பட்டது. அறிவிக்கப்பட்ட 4 நாளில், 300 நபர்களுக்கு, 205 நபர்கள் கல்லூரியில் படிப்பதற்காக விண்ணப்பம் செய்திருக்கின்றார்கள். கல்லூரி கட்டுவதற்கு அம்மாவினுடைய அரசால் ரூபாய் 56 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நம்முடைய சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற ஏழை, எளிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் குறைந்த கட்டணத்திலே, பாலிடெக்னிக் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றோம். அந்தக் கல்லூரியை மேட்டூர், சங்ககிரி, எடப்பாடி ஆகிய மூன்று தொகுதிகளுக்கும் மையமாக இருக்கக்கூடிய வனவாசி பகுதியை தேர்ந்தெடுத்து அமைத்த காரணத்தினாலே, மூன்று தொகுதியிலிருந்தும் மாணவர்கள் அந்த கல்லூரியில் சேருகின்றார்கள். இந்தக் கல்லூரி துவங்கப்பட்ட காரணத்தினால் விவசாயம் மற்றும் நெசவுத் தொழிலை செய்யக்கூடிய ஏழை

குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கின்றோம்.

அதேபோல, பல்கலைக் கழகத்தில் உறுப்புக் கல்லூரிகளாக இருந்த 41 கல்லூரிகளை, ஆண்டொன்றுக்கு ரூபாய் 152 கோடி தொடர் செலவினமாக, அரசுக்கு கூடுதல் செலவினமாக இருந்தாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல் குறைந்த கட்டணத்தில் கல்வி கற்பதற்காக அரசு கல்லூரியாக இந்த ஆண்டு நான் அறிவித்தேன். அதேபோல, இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுத்தார்கள். பல்வேறு அரசுத் துறைகளைக்காட்டிலும் கல்வித் துறைக்கு அதிகமான நிதி ஒதுக்கீடு அரசு செய்திருக்கிறது. அடுத்த ஆண்டு, கொங்கணாபுரம் தொகுதிக்குட்பட்ட எட்டிக்குட்டைமேட்டில் புதிதாக ஒரு பி.எட். கல்லூரி திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எட்டிகுட்டைமேட்டில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம், அது ஒரு வருடத்தில் ஏற்படுத்தப்பட்டு அங்கே சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று பிரம்மாண்டமாக அமைக்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செங்கோடிலிருந்து ஓமலூர் வரை கொங்கணாபுரத்தின் வழியாக நான்கு வழிச்சாலை செல்ல இருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் மொத்த காவல் நிலையங்கள் 1342, அதில் 5 வகை காவல் நிலையங்கள் உள்ளன. இலகுவகை காவல் நிலையம், மிதவகை காவல் நிலையம், கனவகை காவல் நிலையம், மெட்ரோ வகை, மெட்ரோ வகை–2 காவல் நிலையம், அனைத்து மகளிர் காவல் நிலையம். போக்குவரத்து காவல் நிலையங்கள் 266. தற்போது புதிதாக கொங்கணாபுரத்தில் துவக்கப்பட்ட காவல் நிலையத்தோடு சேர்த்து 1343–வது காவல்

நிலையமாக திறக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, வாழப்பாடி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலே 201–வது காவல் நிலையமாக வாழப்பாடியில் அனைத்து மகளிர் காவல் நிலையமாக திறக்கப்பட்டுள்ளது. காவல் துறை இயக்குநர் முதல் இரண்டாம் நிலை காவலர்கள் வரை மொத்த காவலர்களுடைய எண்ணிக்கை 1.7.2018–ன்படி 1 லட்சத்து 24 ஆயிரத்து 236, தற்போது பணியிலுள்ள காவலர்களுடைய எண்ணிக்கை 1 லட்சத்து 12 ஆயிரத்து 728, ஆண்கள் 94 ஆயிரத்து 321, பெண்கள் 18 ஆயிரத்து 407, காலிப் பணியிடங்கள் 11 ஆயிரத்து 508. மற்ற மாநிலங்களோடு தமிழகத்தை ஒப்பிட்டும் பார்க்கும்பொழுது, 1 லட்சம் மக்களுக்கு, தமிழகத்தில் 195.4 காவலர்கள், பீகாரில் 107.7 காவலர்கள், ராஜஸ்தானில் 142.1 காவலர்கள், மேற்கு வங்காளத்தில் 143.4 காவலர்கள், குஜராத்தில் 168.9 காவலர்கள், கேரளாவில் 178.2 காவலர்கள், கர்நாடகத்தில் 183.2 காவலர்கள், உத்திரப்பிரதேசத்தில் 187.8 காவலர்கள், அம்மா அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட 2011–லிருந்து 2017 வரை 32,905 காவலர்கள் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள். உதவி ஆய்வாளர்களைப் பொறுத்தவரைக்கும் 2015–ஆம் ஆண்டு முதல் 2018–ஆம் ஆண்டு வரை 1112 நபர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துணை கண்காணிப்பாளர்கள் 2012–ஆம் ஆண்டு முதல் 2018–ஆம் ஆண்டு வரை 99 நபர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். சேலம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 31 காவல் நிலையங்களில், 5 மகளிர் காவல் நிலையங்கள், 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள். சேலம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 15 மாநகர காவல் நிலையங்களில், 3 மகளிர் காவல் நிலையங்கள், 2 போக்குவரத்துக் காவல் நிலையங்கள்.

2010–ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவல் துறைக்கென்று ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு ரூபாய் 2962 கோடிதான். 2018–19–ஆம் ஆண்டு அம்மாவினுடைய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 7877.58 கோடி. அதாவது, 166 சதவிகிதம் அதிகப்படுத்தி கொடுத்திருக்கின்றோம். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழக காவல்

துறையின் சாதனைகளை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட சட்டம்–ஒழுங்கு பராமரிப்புப் பணியை மேம்படுத்தி, பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறும்வகையில் சட்டத்தின் ஆட்சியை மீண்டும் கொண்டு வந்து கடந்த 7 ஆண்டுகளாக பொது அமைதியை பராமரித்து வருகிறோம்.

முல்லைப் பெரியாறு அணை, கூடங்குளம் அணுமின் நிலையம் எதிர்ப்பு, கெயில் நிறுவனம் எதிர்ப்பு, ஜல்லிக்கட்டு, எதற்கெடுத்தாலும் போராட்டம் என அனைத்து போராட்டங்களையும் அமைதியான முறையில் பொதுமக்களுக்கு அதிக இடையூறு இல்லாமல் நடத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நில அபகரிப்பு புகார்களை விசாரிக்க தனியாக பிரிவு துவங்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வீரபாண்டி ஆறுமுகம், என்.கே.கே.பி.ராஜா, ஜெ.அன்பழகன், ரெங்கநாதன், உடுமலைப்பேட்டை முன்னாள் நகர்மன்றத் தலைவர் வேலுச்சாமி, மதுரை மாவட்ட முன்னாள் செயலாளர் தளபதி, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அட்டாக் பாண்டி, எஸ்.ஆர்.கோபி உட்பட பலர் மீது நில அபகரிப்பு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

31.01.2016 வரை 3203 வழக்குகள் பதிவு செய்து, 3100 எதிரிகள் கைது செய்யப்பட்டு, 3646 கோடி ரூபாய் மதிப்புள்ள 5181 ஏக்கர் நிலம் மற்றும் 34,91,099 சதுர அடி வீட்டு மனைகள் மீட்கப்பட்டு, 2775 நில உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இன்றைக்கு அகில இந்திய அளவில் நம்முடைய காவலர்கள் பெற்ற பரிசுகள் விவரங்களை தெரிவிக்க விரும்புகின்றேன். அகில இந்திய காவல் திறனாய்வுப் போட்டியில் பதக்கங்கள் வெல்பவர்களை ஊக்குவிக்கும் விதமாக, தங்கப்பதக்கம் வெல்பவருக்கு 5 லட்சம் ரூபாயும், வெள்ளி பதக்கம் வெல்பவருக்கு 3 லட்சம் ரூபாயும், வெண்கலப் பதக்கம் வெல்பவருக்கு 2 லட்சம் ரூபாயும், குழுப் போட்டியில் செயல்படுபவர்களுக்கு முறையே

ரூ.50,000, ரூ.30,000, ரூ.20,000–ஆக அதிகரித்து ஆணையிடப்பட்டன. 2012–ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலம், நாசிக்–ல் நடைபெற்ற 55–வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் 2 தங்கம், 5 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்கள், 2 சுழல் கோப்பைகள் வென்று தமிழகத்திற்கு பெருமை சேர்க்கப்பட்டிருக்கின்றன. 2013–ல் போபாலில் நடைபெற்ற 56–வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில், மொத்தமுள்ள 54 பதக்கங்களில், 5 தங்கம், 6 வெள்ளி, 3 வெண்கலம் என 14 பதக்கங்கள் பெற்று, அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று காவலர்கள் பெருமை சேர்த்துள்ளார்கள். 2014–ல் அரியானாவில் நடைபெற்ற 57–வது அகில இந்தியா காவல் பணித்திறன் போட்டியில், 13 தங்கம், 9 வெள்ளி, 6 வெண்கலம் மற்றும் 7 கோப்பைகள் பெற்றது. 2015–ல் பஞ்சாபில் 58–வது அகில இந்திய காவல் பணித்திறன் போட்டியில் 6 தங்கம், 4 வெள்ளி, 1 வெண்கலம் மற்றும் 3 கோப்பைகள் பெற்றது. 2015–ல் அரியானாவில் நடைபெற்ற 59–வது அகில இந்தியா காவல் பணித்திறன் போட்டியில் 7 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் மற்றும் 5 கோப்பைகள் பெற்றது. பிப்ரவரி 2014–ல்அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்ற அகில இந்திய காவல் துப்பாக்கி சுடும் போட்டியில், 22 வீரர்கள் கலந்து கொண்டு, ஒட்டுமொத்த பிரிவில் மாண்புமிகு முதலமைச்சரின் கோப்பையை வென்றது.

2016–ஆம் ஆண்டு தேசிய குற்ற ஆவணத்தின் அடிப்டையின்படி, பெண்கள் பாதுகாப்பாக வாழ உகந்த முதல் நகரமாக கோயம்புத்தூர் நகரமும், மெட்ரோ நகரில் சென்னை முதல் மாநகரமாக உள்ளது. இதிலிருந்து, நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பாக உள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளிவிவரத்தின்படி, களவு போன சொத்துக்களை மீட்பதில் 2013, 2014, 2015 மற்றும் 2016 ஆகிய நான்கு ஆண்டுகளிலும் அகில இந்திய அளவில், தமிழ்நாடு தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. அகில இந்திய அளவில், சிறந்த காவல் நிலையங்களை தேர்வு செய்ய பல்வேறு காரணிகளின் அடிப்படையில் நடைபெற்ற தேர்வில்,

கோவை மாநகர ஆர்.எஸ்.புரம் காவல் நிலையம், நாட்டிலேயே முதலாவது சிறந்த காவல் நிலையமாகவும், சென்னை, அண்ணா நகர் காவல் நிலையம், ஐந்தாவது சிறந்த காவல் நிலையமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, நமக்கு காவல் துறை மூலமாக புகழும், பெருமையும் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாநகர பகுதிகளிலே குற்ற நிகழ்வுகளை எளிதாக கண்டுபிடிப்பதற்கு, இன்றைக்கு சிசிடிவி கேமராக்கள் எல்லா பெருநகரங்களிலும் பொருத்தப்பட்டு வருகின்றன. எந்த அளவில் குற்றம் நிகழ்ந்தாலும், அந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி விடும். அதன் மூலம் யார் அந்தக் குற்றச் செயலில் ஈடுபட்டார்கள் என்று எளிதில் கண்டுபிடித்து அவர் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தகுந்த தண்டனையும் பெற்றுத் தருவதற்கு அம்மாவினுடைய அரசு உரிய ஆலோசனை வழங்கி, அதன் பேரிலே நம்முடைய காவல் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டி, பயிரை காப்பதற்கு வேலி எப்படி பாதுகாப்பாக அமைகிறதோ, அதுபோல, மக்களை காப்பதற்கு காவல் துறை மிக அவசியம், அந்தக் காவல் துறை தமிழகத்தில் மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த காவல் துறை இயக்குநர் அவர்களுக்கும், அவருடன் இணைந்து பணியாற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**